# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti.**

**Case No. M.C – 4/2025**

**Deposition of Witness for Prosecution : P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : ரஞ்சிதா | | Caste | : |
| Father/Husband Name | : பத்மநாபன் | | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 29.04.2026.**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

**1.** நான் 9ம் வகுப்புவரை படித்துள்ளேன். எனது திருமணத்தில் 15 பவுன் நகை போட்டார்கள். எதிர்மனுதாரா் வீட்டில் தாலிக்கொடி எவ்வளவுக்கு போட்டார்கள் என்றால் எதுவும் போடவில்லை. 5 பவுன் தாலிக்கொடி போட்டார்கள் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல். நாங்கள் திருமணம் முடித்துவிட்டு எங்களது மாமியார் வீட்டில் குடியிருந்தோம். நான் கூத்தையார்குண்டுவில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்தேன். திருமணத்திற்கு எதிர்மனுதாரர் குடிப்பார் என்று சொல்லியுள்ளது பற்றி எனக்கு எப்படி தெரியும் என்றால் அவரது வீட்டார்தான் சொன்னார்கள். எதிர்மனுதாரர் என்ன படித்துள்ளார் என்றால் ITI படித்துள்ளார். மதுரையில் உள்ள பசுமலையில் படித்துள்ளார். எதிர்மனுதாரர் அரசு போக்குவரத்துக்கழகத்தில் பாடிகட்டும் வேலை செய்து வந்ததாக சொல்லி திருமணம் முடித்தார்கள். எதிர்மனுதாரா் ITI ல் வயர்மேன்டிரேடு படித்துள்ளதாக திருமணத்தின் போது எங்களிடம் சொன்னார்கள் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்பு தனியார் நிறுவனத்தில் வண்டிக்கு பாடிகட்டும் வேலை செய்து வந்தார் என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு எவ்வளவு சம்பளம் என்றால் தெரியாது. எங்களுக்கு திருமணம் 2014ல் நடந்தது. எதிர்மனுதாரருக்கு எப்போது விபத்து ஏற்பட்டது என்றால் 10 வருடங்கள் இருக்கும். எதிர்மனுதாரருக்கு மதுரை கீழவாசலில் கிருத்துவமிஷன் மருத்துவமனையில் சிகிச்சை

பெற்றார். மேற்படி விபத்தில் அவருக்கு வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு பிளேட் பொருத்தப்பட்டுள்ளது. சிகிச்சை முடிந்து எதிர்மனுதாரா் பெற்றோா் வீட்டிற்கு சென்றோம். வீட்டிற்கு வந்து மூன்று நாட்களில் உனக்கு பீ, மூத்தரம் அள்ள முடியாது என்று சொல்லி எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அதன்பிறகு ஆறு மாதம் கழித்து எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்தேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் சிகிச்சைக்கு எனது 5 பவுன் நகையை அவரது அண்ணனிடம் கொடுத்தேன். ரூபாய் இருபதாயத்திற்கு அடகு வைத்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிர்மனுதாரருக்கு மல்லிகைப்பூ தோட்டம் உள்ளது. ம.சா.ஆ.7 ஆவணம் பட்டாவின்படி எதிர்மனுதாரரின் அப்பாவின் பங்கு 50 செண்ட் என்றால் சரிதான். எதிர்மனுதாரருடன் சகோதரன், சகோரரி, அவரது அம்மா ஆகியோர்கள் உள்ளார்கள். அதை நான்கு பங்காக வைத்தாள் 12 செண்ட் வரும் என்றால் தெரியாது. ம.சா.ஆ.8 ஆவணம் பட்டாவின்படி எதிர்மனுதாரரின் அப்பாவின் பங்கு 23 செண்ட் என்றால் சரிதான். மேற்படி தோட்டத்திற்கு மோட்டார், மின் இணைப்பு உள்ளது. மேற்படி 23 செண்டிற்கு மின்சாரம் மற்றும் கிணறு கிடையாது என்றாலும் வானம் பார்த்த பூமி என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் அவருடைய அண்ணன் மனைவியுடன் தகாத உறவில் இருந்ததாக சொல்வதை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் நான் பார்த்தேன். விபத்து நடந்த பிறகு எதிர்மனுதரரை கவனிக்காமல் பீ, மூத்திரம் அள்ள முடியாது என்று சொல்லி நான் விட்டு விட்டு சென்று விட்டதால் எதிர்மனுதாரரின் அண்ணன் மனைவி தான் அவரை பார்த்துக்கொண்டாா் என்றாலும் ஆனால் நான் அதை தப்பாக சித்தரித்து சொல்லியுள்ளளேன் என்றால் சரியல்ல. 2023ம் ஆண்டு மே மாதம் எனது நகையை அடகு வைத்தார்கள் என்றும் சொல்வதற்கு ரசீது எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 13.05.2023ம் தேதி விக்கிரமங்கலம் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் மீது புகார் மனு கொடுத்துள்ளது சம்பந்தமாக புகார் மனு ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதன்பிறகு உசிலம்பட்டி அனைத்து மகளிா் காவல் நிலையத்திற்கு விக்கிரஙமங்கலம் காவல் நிலையத்தில் போகச்சொன்னார்கள் என்றால் சரிதான். நாங்கள் அங்கு சென்றோமா என்றால் இல்லை. மீண்டும் 14.06.2023ம் தேதி விக்கிரஙமங்கலம் காவல் நிலையத்தில் புகாா் கொடுத்தது சம்பந்தமாக ரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் கொடுத்த புகாரில் எனது நகை எதிர்மனுதாரரிடம் உள்ளது என்று எனது புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி நகைகளை என்ன செய்தார்கள் என்றால்

எதிர்மனுதரரரின் அக்கா பெயரில் அடகு வைத்தார்கள். மேற்படி விக்கிரஙமங்கலம் காவல் நிலைய கோப்புகளை நீதிமன்றத்திற்கு வரவழைத்து விசாரித்தாள் உண்மை தெரியும் என்றால் சரிதான். நகையை எதிர்மனுதாரர் தரமறுக்கிறார் என்று வேறுஎங்கும் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. திருமணத்தின் போது எனக்கு 5 பவுன் தாலிக்கொடியும், அதன் பிறகு 1 பவுன் தங்க நகையும் எனக்கு வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது பெண் குழந்தைகள் பிறந்த போது எதிர்மனுதாரரின் அக்கா அங்கயற்கண்ணி தலா அரை பவுன் நகை செய்தார் என்றால் சரியல்ல, இதுவரை அவர் வந்து பார்த்ததேகிடையாது. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகள் நித்தியஸ்ரீ 6ம் வகுப்பு படிக்கிறாள். 2வது மகள் 5ம் வகுப்பு படிக்கிறாள். முதல் மகள் செக்காணுரனியில் படிக்கிறாள். 2வது மகள் எனது வீட்டருகே படிக்கிறாள். எனது முதல் மகள் அரசு பேருந்தில் சென்று வருகிறாள் என்றால் ஆட்டோவில் செல்கிறார். இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.